அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12

(இவராலன்றி) வேறு எவராலும் இரட்சணியமில்லை; ஏனெனில் நாம் இரட்சணியம் அடையவேண்டியதற்கு வானத்தின்கீழ் (அவருயை நாமமல் லாது) வேறே நாமம் மனுஷருக்குக் கொடுக்கப்படவில்லை, என்றார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:31

அதற்கு அவர்கள்: ஆண்டவராகிய சேசுநாதரை விசுவசி. அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

தீமோத்தேயு 2 1:9

அவர் நம்முடைய கிரியைகளைப் பாராமல், தம்முடைய சித்தத்தையும், கிறீஸ்து சேசுவுக்குள் உலகாதிகாலத்துக்குமுன் நமக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதத்தையும் பார்த்து, நம்மை மீட்டிரட்சித்து, தம்முடைய பரிசுத்த அழைப்பால் நம்மை அழைத்திருக்கிறார். (தீத்து. 3:5.)

சங்கீதங்கள் 62:1

தேவனே! என்னுடைய தேவனே! விடியற்காலம் விழித்து நான் உம் மைத் தேடுகிறேன்; என் ஆத்துமம் உமதுபேரில் தாகங்கொண்டது; என் சரீரமும்கூட உமது பேரில் எவ்வளவு வாஞ்சை கொண்டது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:21

அப்பொழுது சம்பவிப்பதே தெனில், ஆண்டவருடைய நாமத்தை மன்றாடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் என்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறார் என்பதே. (யோவேல் 2:32; உரோ. 10:13.)

கொரிந்தியர் 1 6:9-10

அநீதர்கள் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள மாட்டார்கள் என்று அறியீர்களோ? மோசம் போகாதேயுங்கள்: தூர்த்தரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக் காரரும், (கலாத். 5:19; எபே. 5:5.) சிற்றின்பப்பிரியரும், ஆணும் ஆணுமாய் மோகிக்கிறவர்களும், திருடரும், பொருளாசைக்காரரும், குடி வெறியரும் உதாசினரும், கொள்ளைக்காரரும் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை.

தீத்துவுக்கு எழுதிய நிருபம் 2:11-12

ஏனெனில் நமது இரட்சகராகிய சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் சகல மனிதருக்கும் வெளியாகி, (தீத்து. 3:4.) நாம் அவபக்தியையும், இலௌகீக இச்சைகளையும் வெறுத்து விட்டு, இவ்வுலகத்தில் மன அமைதி யோடும், நீதியோடும், பக்தியோடும் நடக்கவும்,

உரோமாபுரியார் 1 10:10

எவ்வாறெனில், நீதியை அடைய இருதயத்தால் விசுவசிக்கிறோம். இரட்சணியமடைய வாயால் அறிக்கையிடுகிறோம்.

இராயப்பர் பொது நிருபம் 2 3:9

சிலர் எண்ணுகிறபடி ஆண்டவர் தமது வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தாமதிப்பதில்லை. ஆனாலும் அவர் ஒருவராவது கெட்டுப்போக விரும்பாமல், எல்லாரும் தவத்துக்குத் திரும்பவேண்டுமென்று விரும்பி, உங்களைப்பற்றிப் பொறுமையோடு சகித்து வருகிறார். (எசே. 18:23; 1 தீமோ. 2:4.)

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 18:27

அதற்கு அவர்: மனிதர்களால் கூடாதவைகள் சர்வேசுரனால் கூடும் என்று அவர்களுக்குச் சொன்னார்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 19:10

சிதறிப்போனதைத் தேடி இரட் சிக்கும்படியாகவே மனுமகனும் வந்தி ருக்கிறார் என்றார். (மத். 18:11.)

அர்ச். மாற்கு சுவிசேஷம் 16:16

விசுவசித்து, ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சண்ணியமடைவான், விசுவசியாதவனோ ஆக்கினைத் தீர்வை யிடப்படுவான்.

இராயப்பர் பொது நிருபம் 1 1:8-9

அவரை நீங்கள் காணாதிருந்தும், சிநேகிக்கிறீர்கள்; இப்போது நீங்கள் அவரைத் தரிசியாதிருந்தும், அவரை விசுவசிக்கிறீர்கள். விசுவசித்து, உங்கள் விசுவாசத்தின் கதியாகிய ஆத்தும இரட்சணியத்தை அடைவீர்களென்பதால், வாக்குக்கெட்டாத தும், மகிமை நிறைந்ததுமான சந்தோ ஷத்தால் அகமகிழுவீர்கள்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 7:13-14

நெருக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். ஏனென்றால் கேட்டுக்குச் செல்லும் வாசல் அகன்றதும் அதன்வழி விசாலமுமாயிருக்கின்றது. அதில் பிரவேசிக்கிறவர்களும் அநேகர். (லூக். 13:24.) சீவியத்துக்குச் செல்லும் வாசல் எவ்வளவோ நெருக்கமும் அதன் வழி எவ்வளவோ ஒடுக்கமுமாயிருக்கின்றது! அதைக் கண்டுபிடிக்கிறவர்களும் சொற்பப்பேர்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 9:28

அப்படியே கிறீஸ்துநாதரும் அநேகருடைய பாவங்களை நிர்மூலமாக்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டார். இரண்டாந்தரமோ தம்மை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு இரட்சகராகப் பாவமின்றித் தோன்றுவார். (உரோ. 5:9; 1 இரா. 3:18.)

அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:47

ஏனெனில்: நீர் பூமியின் கடைசி எல்லைமட்டும் இரட்சிப்பாயிருக்கும் படிக்கு உம்மைப் புறஷைஜாதியாருக்கு ஒளியாக ஏற்படுத்தினேன், என்றபடி ஆண்டவர் எங்களுக்கு இவ்விதமாய்க் கட்டளையிட்டிருக்கிறார் என்றார்கள். ழுழுழு 47. இதில் சொல்லப்பட்ட வாக்கியம் இசையாஸ் தீர்க்கதரிசனம் 49-ம் அதி.

உரோமாபுரியார் 1 5:7-8

நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறதே அரிது. ஆகிலும் நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணியலாம். ஆனால் நாம் இன்னும் பாவிகளாயிருக்கும்போதே, குறிக்கப்பட்ட காலத் தில் நமக்காகக் கிறீஸ்துநாதர் மரித்த தினாலே சர்வேசுரன் நமதுபேரில் வைத்திருக்கிற அன்பை விளங்கப் பண்ணுகிறார்.

உரோமாபுரியார் 1 1:16

ஏனெனில் சுவிசேஷத்தைப்பற்றி நான் கூச்சப்படேன். ஏனென்றால் முந்த யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவசிக் கிற எவனுக்கும் அது இரட்சணியமாகிய தேவ வல்லபமாயிருக்கின்றது. (மத். 10:32; 1 கொரி. 1:23; அப். 13:46.) ழுழுழு 16. யூதரிலும் கிரேக்கரிலும்:- கிரேக்கத் தேசத்தார் சாதாரணமாய் அஞ்ஞானிகளாயிருந்ததினாலும், அவர்கள் பல தேசங்களில் பரவியிருந்ததினாலும், இவ்விடத்திலும், இன்னும் பல இடங்களிலும் கிரேக்கர் என்பது அஞ்ஞானிகளென்று அர்த்தங்கொள்ளுகிறது. சில சமயங்களில் யூதர்களல்லாத இதர ஷஜாதிகளென்றும் அர்த்தங்கொள்ளும். (மெனோக்கியுஸ்)

அர்ச். மாற்கு சுவிசேஷம் 10:27

சேசுநாதர் அவர்களை நோக்கி: இது மனிதர்களால் கூடாததாயினும், சர்வேசுரனால் கூடாததல்ல; ஏனெனில் சர்வேசுரனால் சகலமும் கூடுமென்று திருவுளம்பற்றினார்.

கொரிந்தியர் 1 15:22

அன்றியும் ஆதாமில் எல்லோரும் மரிக்கிறதுபோல, கிறீஸ்துநாதரில் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

சங்கீதங்கள் 18:35-36

அபாக்கூக் ஆகமம் 3:17-18

ஏனெனில், (அக்காலையில்) அத்தி புஷ்பிக்காது; திராட்சைக் கொடிகள் தளிர் கொள்ளா; ஒலீவ் மரம் கனி மோசஞ் செய்யும்; வயல் கள் தானியந் தராது; ஆடின்றி மந்தை வெறுமையாகும்; தொழுவங்களில் மாடு கன்றுகளிரா. யானோ ஆண்டவரில் சந்தோ ஷங் கொண்டாடுவேன்; என் இரட்சகராகிய தேவனின் அக்களிப் புக் கொள்வேன்.

இசாயாஸ் ஆகமம் 43:4

நமது கண்களுக்கு நீ கனமுற்ற தாயும், விலையேறப்பெற்றதாயும் ஆனது தொட்டு உன்னை விசேஷ விதமாய் நேசித்தோம்; உனக்காக மனிதரை (பிறர்) கையளிப்போம், உன் சீவனுக்காகச் சனங்களைப் போக்கடிப்போம்.

உரோமாபுரியார் 1 5:10

நாம் சர்வேசுரனுக்குச் சத்துருக்களாயிருக்கையிலே, தேவ சுதனு டைய மரணத்தினால் அவரோடு சமாதானமாக்கப்பட்டிருக்க, சமாதான மாக்கப்பட்டபின்பு அவருடைய ஷஜீவனால் நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 10:52

சேசுநாதர் அவனை நோக்கி: நீ போகலாம்; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். என்றவுடனே அவன் பார்வையடைந்து, வழியில் அவரைப் பின்தொடர்ந்து போனான்.